நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பட்டுக்கோட்டை.
முன்னிலை – திரு. த.சுதர்சன்.,எம்.ஏ., எல்.எல்.பி.,
நீதித்துறை நடுவர், பட்டுக்கோட்டை.
2026 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 17 ம் நாள் வெள்ளிக் கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண்.57/2026
CNR. No.TNTJ11-000184-2026

அரசு சார்பாக காவல் உதவி ஆய்வாளர்,
மதுக்கூர் காவல் நிலையம்
குற்ற எண். 448/2025 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1.செல்வகுமார் (வயது –26/2026),
த/பெ.மலைராஜா,
இந்திரா நகர், இரயில்வே ஸ்டேசன் ரோடு,
போடிநாயக்கனுர்,
2.சையது கலீம் (வயது –25/2026),
த/பெ. சையது கசபர் அலி (எ)சையது ஜான் பைஷா,
148, மெயின்ரோடு, அக்கர் வில்லேஜ்,
திண்டிவனம், விழுப்புரம்,
அருகில் செஞ்சி மெயின் ரோடு, எம்.ஜி.ஆர். நகர்,
திண்டிவனம், .... எதிரிகள்

**<u>வழக்கு சுருக்கம்</u>**

| வ.எண் | விவரங்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1) | வழக்கு எண் | 57/2026 |
| 2) | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | மதுக்கூர் காவல் நிலையம்,<br>448/2025 |
| 3) | எதிரியின் பெயர், தந்தை பெயர் மற்றும் வயது, தொழில், முகவரி, | 1.செல்வகுமார் (வயது –26/2026),<br>த/பெ.மலைராஜா,<br>இந்திரா நகர், இரயில்வே ஸ்டேசன் ரோடு,<br>போடிநாயக்கனுர்,<br>2.சையது கலீம் (வயது –25/2026),<br>த/பெ. சையது கசபர் அலி (எ)சையது ஜான் பைஷா,<br>148, மெயின்ரோடு, அக்கர் வில்லேஜ்,<br>திண்டிவனம், விழுப்புரம்,<br>அருகில் செஞ்சி மெயின் ரோடு, எம்.ஜி.ஆர். நகர்,<br>திண்டிவனம், |
| 4) | சம்பவம் நடைபெற்ற நாள் | 09.12.2025 |

| | | |
|---|---|---|
| 5) | புகார் அளித்த நாள் | 08.12.2025 |
| 6) | கைது செய்த நாள் | A1–25.12.2025<br>A2–25.12.2025 |
| 7) | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A1–Custody<br>A2–Custody |
| 8) | அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்பிய தேதி | – |
| 9) | விசாரணை தொடங்கிய தேதி | 22.05.2026 |
| 10) | விசாரணை முடிவுற்ற தேதி | 06.07.2026. |
| 11) | தீர்ப்பு அல்லது உத்தரவு | அரசு தரப்பில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான 331(4),305(a) BNS ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பித்து நிரூபித்துள்ளனர். எனவே எதிரிகளுக்கு 331(4),305(a) BNS ன் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிரிகள் மீது குற்றவாளிகள் என தீர்மானித்து பிரிவு 271(2) BNSS ன் கீழ் தீர்மானிக்கின்றது . |
| 12) | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்குதல் | ஆம் |
| 13) | காலதமதத்திற்கான காரணம் | குற்றப்பத்திரிக்கை 29–01–2026–ம் தேதி அன்றுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.29–01–2026 ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கீன் தீர்ப்புரை 17.07.2026ம் தேதி அன்று திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 29–01–2026 ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, குற்றமுறையிடுபவர் தரப்பில் திரு.M.ரூபேஷ்., B.A., L.L.B.,(Hons) அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிகள் தரப்பில் திரு.T.அஸ்வின்.,பி.ஏ.எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும் வழக்கு ஆவணங்கள், சாட்சியங்கள் அனைத்தும் பரிசீலனை செய்து இன்று வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

**<u>1). அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>**

வாதியின் பூட்டிக்கிடந்த மாடி வீட்டில் மறைத்து வைத்திருந்த சாவியை எடுத்து கதவினை திறந்து திருட வேண்டும் என்ற நோக்கத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து பெட்ரூமில் இருந்த வாதி அலுவலுக்காக பயன்படுத்திய DELL Laptop ஐ ஒன்றினை திருடி சென்ற குற்றத்திற்காக எதிரிகளின் மீது 331(4),305(a) BNS ன் கீழ் தண்டிக்க தக்க குற்றம் புரிந்துள்ளதாக மதுக்கூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. <u>நகல் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைதல்:</u>**

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டவுடன் அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக எதிரிகளுக்கு பிரிவு 230 BNSS ன் கீழ் வழங்கப்பட்டு, போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டது.

3. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றம் பற்றி வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரிகள் மீது 331(4),305(a) BNS ன் படி குற்றச்சாட்டு வனைந்து, குற்றச்சாட்டு பற்றி தமிழில் விளக்கி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தம்மிச்சையாக மேற்கண்ட குற்றச்சாட்டை மறுத்ததால் வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**<u>4. அரசு தரப்பு சாட்சிகள்.</u>**

அரசு தரப்பில் அ.சா.1 முதல். அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல். அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் அவர்கள் மூலம் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பில் சான்று பொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>5.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

(5.1) அ.சா.1 திரு.விக்னேஷ் தனது சாட்சியத்தில், கடந்த 07.12.2025 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த என் அம்மாவை பார்க்க சென்றேன். மறுநாள், காலை 09.00 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது, வீட்டின் Side door திறந்த நிலையில் இருந்தது. வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, பொருட்கள் கலைந்தும், Dell Laptop, அம்மாவின் தாலி, குண்டு, காசு காணாமல் போய் இருந்தது. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பின்பு போலிசார் அழைத்தன் பேரில் கிருஸ்துமஸ் அன்று காவல் நிலையம் சென்றேன். அங்கு ஆஜர் எதிரிகள் என் Laptop ஐ திருடியதாக போலிசார் சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன்.

(5.2) அ.சா.2 திரு.சிவக்குமார் தனது சாட்சியத்தில், கடந்த 07.12.2025 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த என் மனைவியை பார்க்க என் மகன் வந்துவிட்டான். மறுநாள், காலை 09.00 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது, வீட்டின் Side door திறந்த நிலையில் இருந்ததாகவும், வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, பொருட்கள் கலைந்தும், Dell Laptop, என் மனைவியின் தாலி, குண்டு, காசு காணாமல் போய் இருந்தது என்று என் மகன் தகவல் சொன்னார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பின்பு போலிசார் அழைத்தன் பேரில் கிருஸ்துமஸ் அன்று காவல் நிலையம் சென்று அங்கு ஆஜர் எதிரிகள் என் Laptop ஐ திருடியதாக போலிசார் சொன்னார்கள்.

(5.3)அ.சா.3 திரு.அறிவழகன் மற்றும் அ.சா.4 திரு. பழனியப்பன் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளாக முன்னிடப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்களது சாட்சியத்தில், கடந்த 25.12.2025–ம் தேதி இருவரும் பேசிக்கொண்டிருந்ததாகவும், அங்கு வந்து போலிசார் சிவக்குமார் வீட்டில் திருடிய எதிரிகளை கைது செய்யததாகவும், தங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டார்கள் எதிரிகள் இருவரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அவர்களிடம் கலர் பையில் இருந்து Laptop ஐ எங்கள் முன்னிலையில் பறிமுதல் செய்தார்கள்.

(5.4) அ.சா.5 திரு. கீதா தனது சாட்சியத்தில், 08.12.2025 ம் தேதி பணியில் இருந்தபோது, தகவலை பெற்று சம்பவ இடம் சென்று ஆய்வு செய்து வீட்டில் இருந்த பொருட்களில் மூன்று கைவிரல் ரேகை பதிவு செய்தேன். மூன்றில் ஒரு விரல் ரேகை வீட்டில் யாருடன் ஒத்துப்போகாததால் NAFIS (National Automated finger print identification system Software) ல் உள்ளீடு

செய்தததில், விரல் ரேகை கரூர் குற்ற எண். 1336/2020, வழக்கு தொடர்புடைய செல்வக்குமாரின் பெருவிரல் ரேகையுடன் ஒத்துப்போனது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.6 திரு. அருளரசு கடந்த 09.12.2025 போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(5.6) அசா.7 திரு.உதயன் (தலைமை காவலர்) தனது சாட்சியத்தில், கடந்த 08.12.2025 ம் தேதி அன்று இரவு 22.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது புகார்தாரர் விக்னேஷ் என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண். 448/2025, ச/பி. 303(2), BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.9) பதிவு செய்தேன். மேல் விசாரணைக்கு உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

(5.7) அசா.8 திரு. இளங்கோ (உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில், குற்ற எண் 448/2025, விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.12.2025 ம் தேதி அன்று காலை 09.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசா.ஆ.10 ஆக தயார் செய்தேன். பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு ஒரு விரல் ரேகை பதிவு கூடத்திற்கு தகவல் தெரிவித்து, அதன் ஆய்வாளர் கீதா சம்பவ இடத்திற்கு வந்து பதிவுகளை எடுத்துக்கொண்டு அவர் எதிரி செல்வக்குமாரின் விரல் ரேகை ஒத்து போவது கூறியதின் அடிப்படையில் எதிரியை தேடி வந்தபோது, 25.12.2025 எதிரிகளை கைது செய்தபோது, அவர்கள் திருடியதாக தெரிய வரவும், கைது செய்தபோது தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதன் அடிப்படையில் சட்டப்பிரிவை மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மாறுதல் செய்தேன்.

**6.**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான அம்சங்களை தொகுத்து **351(1)(b) BNSS**–ன் படி வினவிய போது குற்றம் சாட்டபவர் அவற்றை பொய் சாட்சியம் என மறுத்தார். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் முன்நிறுத்தப்படவில்லை.

**7.இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆழ்ந்து பரிசீலனை செய்யப்பட்டது.**

இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவெனில், எதிரிகள் மீது வனையப்பட்–டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

(7.1) இந்திய சாட்சிய அதிநியம், 2023 ச/பி.104ன் படி எதிரிகளக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொழுது அரசு தரப்பை சார்ந்ததாகும். அரசுதரப்பு வழக்கு நிரூபிக்க அரசு தரப்பு அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சியகள் விசாரிக்கப்பட்டுள்ளன.

(7.2) அ.சா.1 திரு. விக்னேஷ் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் கடந்த 07.12.2025 வீட்டை பூட்டி விட்டு மருத்துவனைக்கு சென்று விட்டதாகவும், மறுநாள் காலை 09.00 மணிக்கு வந்து பார்த்த போது வீட்டின் பூட்டு உடைத்து, வீட்டிற்குள் இருந்த Dell Laptop காணாமல் போய் இருந்தது. இது சம்பந்தமாக மதுக்கூர் காவல் நிலையம் சென்று அ.சா.ஆ.1 புகார் மனு கொடுத்தாக சொல்லியுள்ளார். பின்பு, திருடு போன பொருட்களை போலிசார் எதிரிகளை கைது செய்து கைப்பற்றிவிட்டதாக தகவல் சொன்னதன் பேரில் காவல் நிலையம் சென்ற போது எதிரிகளை போலிசார் அடையாளம் காட்டியதாக சொல்லியுள்ளார். பின்பு, அதன் அடிப்படையில் எதிரிகளை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியுள்ளார்.

(7.3) மேற்படி, அ.சா.1 சாட்சியத்தை, கவனமாக பரிசீலனை செய்ததில்,அவர் சம்பவத்தின் போது எதிரியை நேரில் கண்ணுற்ற சாட்சி இல்லை என்பது தெரிய வருகிறது. மேலும், அரசு தரப்பில் திருட்டு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சொல்லப்படும் சாட்சியம் வேறு யாரும் இல்லை. எனவே, சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியத்தின் அடிப்படையில் தான் தற்போதைய அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது. இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியம் மேன்மை பெறுகின்றது. அவர்களின் சாட்சியத்தை வைத்து தான் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பு நிரூபிக்க முடியும்.

(7.4) அரசு தரப்பு அ.சா.3 மற்றும் அ.சா.4 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். எனவே, மேற்படி அசா.3, அ.சா.4 சாட்சியத்தை பரிசோதிப்பதற்கு முன்னாள் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8

சாட்சியத்தை பரிசோதிப்பது அவசியமாகும்.

(7.5) அ.சா.8 திரு. இளங்கோ அவர் தனது முதல் விசாரணையில் கடந்த 25.12.2025 காலை 09.30 மணியளவில் மதுக்கூர் பேருந்து நிலையம் பின்புறம் உள்ள பாப்பாத்திக்குளம் அருகில் எதிரிகளை கைது செய்து 1 வது எதிரி செல்வகுமார், தாமாக முன்வந்து அ.சா.3அறிவழகன் மற்றும் அ.சா.4 திரு.பழனியப்பன் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், மேலும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் (அனுமதிகப்பட்ட பகுதியின் மூலம்) இந்த வழக்கில் திருடிய Dell Laptop, அரக்கு கலர் பை– ஐ ஒப்படைப்பதாக ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றியதாக சொல்லியுள்ளார். பிறகு எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும் சொல்லியுள்ளார். அவரது சாட்சியத்தை ஒத்துரைக்கும் வகையில் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.3 அறிவழகன், மற்றும் அ.சா.4 பழனியப்பன் சாட்சியம் அளித்துள்ளார்களா இல்லையா என்பது குறித்து பார்ப்பது அவசியமாகிறது.

(7.6) அ.சா.3 திரு. அறிவழகன், மற்றும் அ.சா.4 திரு.பழனியப்பன் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் தனது முதல் விசாரணையில் கடந்த 25.12.2025ம் தேதி அன்று பஸ் ஸ்டாப்பில் பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது போலிசார் எதிரிகளை கைது செய்துள்ளதாகவும், அதனால் தங்களை சாட்சிகளாக இருக்ககேட்டுக் கொண்டதாகவும், அதன் பின் எதிரிகளை விசாரித்து கொண்டிருந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். பிறகு எதிரி செல்வகுமார் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், பிறகு அரக்கு கலர்பை, Dell Laptop ஐ, போலிசார் அ.சா.ஆ.12 கைப்பற்றுதல் மகசர் வாயிலாக கைப்பற்றியதாகவும், அதில் உள்ள சாட்சி கையொப்பம் தங்களுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(7.7) மேற்படி அ.சா.3, அ.சா.4 அளித்துள்ள சாட்சியத்தினை கவனமாக பரிசீலனை செய்ததில் அவர் டிசம்பர் 25,2025 அன்று போலிசார் செல்வகுமார், சையது கலீம், பிடித்து விசாரித்து கொண்டிருந்ததாகவும், அன்றைய தினத்தில் தான் கைப்பற்றுதல் மேற்கொண்டாதகாவும், சொல்லி உள்ளது தெரிய வருகிறது.

(7.8) மேலும், அ.சா.3 அறிவழகன், மற்றும் அ.சா.4 பழனியப்பன் தங்களது சாட்சியத்தில் சொல்லியுள்ள கைப்பற்றுதல் தேதியானது புலன்விசாரணை அதிகாரியின் வாய் மொழி

சாட்சியத்திற்கும், ஆவணம் சாட்சியமான அ.சா.ஆ.12 கைப்பற்றுதல் மகசரில் சொல்லப்ட்ட தேதிக்கும் ஒத்துரைத்து காணப்படுகிறது. மேலும், புலன் விசாரணை அதிகாரியின் வாய் மொழி சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.12 கைப்பற்றுதல் மகசரின் படி டிசம்பர் 25,2025 அன்று காலை தான் Dell Laptop,அரக்கு கலர்பை கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும், அ.சா.3 அறிவழகன், மற்றும் அ.சா.4 பழனியப்பன் டிசம்பர் 25,2025 அன்று தான் கைப்பற்றுதல் மேற்கொள்ளப்பட்டதாக ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், அ.சா.3 மற்றும் அ.சா.4 இருவரும் தங்களது முதல் விசாரணையில் வழக்கின் தடையப்பொருள்களை எந்த இடத்தில் இருந்து எதிரிகளிடம் கைப்பற்றினார் என குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள் . எனவே, வழக்கின் தடயப்பொருள் எதிரிகளிடம் இருந்து தான், மேலே சொல்லப்படும் இடத்தில் இருந்து பறிமுதல் செய்யப்பட்டது என்று இந்நீதின்றத்திற்கு தெரியவருகிறது.

(7.9) மேலும், அ.சா.5 கீதா தனிவிரல் ரேகை காவல் ஆய்வாளர் சாட்சியத்தை, கவனமுடன் பரிசீலிக்கையில், அவர் சம்பவ இடத்தில் இருந்து மூன்று கைவிரல் ரேகை மாதிரியை எடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அதில், 2 விரல் ரேகை வீட்டில் உள்ளவர்கள் உடையதாகும். மற்றொரு விரல் ரேகை ஒத்துப்போகாததால் அதை ஆய்வு செய்தபோது, எதிரி செல்வகுமார், த/பெ. மலைராஜா உடன் ஒத்துப்போனதாக அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 அறிக்கை அளித்து சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி ஆவணங்களை பரிசீலிக்கையில் எதிரி செல்வக்குமார் புகார்தாரர் விக்னேஷ் வீட்டிற்குள் நுழைந்துள்ளார் என்பதும், அவரது வீட்டில் Dell Laptop ஐ திருடியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. மேலும், எதிரிகள் இருவரும் AAA Lodge ல் தங்கி இருந்ததற்கான ஆவணமான அ.சா.ஆ.13 ஐ பரிசீலிக்கையில், எதிரிகள் இருவரும் பட்டுக்கோட்டைக்கு வந்து 06.12.2025ம் தேதி தங்கியுள்ளார் என்பது தெரிய வருகிறது.

(7.10) எனவே, புலன் விசாரணை அதிகாரியின் வாய்மொழி சாட்சியத்திற்கும், ஆவண சாட்சியமான அ.சா.ஆ.12 கைப்பற்றுதல் மகசரில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் ஒத்துரைத்து அ.சா.3, அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1 மற்றம் அவரது அப்பா அ.சா.2 நீதிமன்றத்தில் வழக்கின் தடயப்பொருளான அ.சா.பொ.1 Dell Laptop ஐ அவர்களுடையது தான் என்று அடையாளம் காட்டியுள்ளார்கள். எனவே, இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட கைப்பற்றுதலானது எந்த வித சந்தேகமும் ஏற்படவில்லை. எனவே, இந்நிலையில் புலன் விசாரணை அதிகாரி அ.சா.8 திரு. இளங்கோ அவர்கள் மேற்கொண்ட கைப்பற்றுதலானது சட்டப்படியான முறையில் நிரூபிக்கப்பட்டதாக

இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(7.11) எனவே, அரசு தரப்பில் சொல்லப்படுகின்ற அரக்கு கலர்பை, Dell Laptop, எதிரிகளுக்கு இடையே உள்ள தொடர்பு குறித்து கைப்பற்றுதல் மகசர் சாட்சி அ.சா.3, அ.சா.4 உறுதிபட மெய்பித்து சாட்சியம் அளித்துள்ளனர். எனவே, இந்நிலையில் எதிரிகள் தான் அரக்கு கலர்பை, Dell Laptop ஐ திருடினார்கள் என்ற குற்றச்சாட்டானது சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியத்தின் அடிப்படையிலும் மற்றும் எதிரியின் கைரேகையை பொறுத்து NAFIS software மூலமும் மற்றும் அ.சா.1ன் மூலமும் அரசு தரப்பு நிரூபித்து விட்டது என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.**<u>முடிவாக,</u>**

(8.1) அரசு தரப்பில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான 331(4),305(a) BNS ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பித்து நிரூபித்துள்ளனர். எனவே எதிரிகளுக்கு 331(4),305(a) BNS ன் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிரிகள் மீது குற்றவாளிகள் என தீர்மானித்து பிரிவு 271(2) BNSS ன் கீழ் தீர்மானிக்கின்றது .

(8.2) எதிரிகளிடம் தண்டனை பற்றி வினவிய போது

(8.3) எதிரிகள் **"தவறு செய்ததை நினைத்து மனம் வருந்தி தாங்கள் திருந்தி வாழ ஆசைப்படுகிறோம். மன்னித்து குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும்"** என்று கூறினார்கள் .

(8.4) இருப்பினும், எதிரிகளியின் குடும்ப சூழல், வழக்கின் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், மேலும் எதிரிகள் இதுநாள் வரையில் சிறையிலிருந்த நாட்களை கருத்தில் கொண்டும், பின்வருமாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.

(8.5) முடிவாக, 1, 2 எதிரிகள் மீது வனையப்பட்ட 331(4),BNS–ன் கீழான குற்றத்திற்கு 1, 2 எதிரிகளுக்கு ஒரு வருட காலம் மெய் காவல் சிறைத்தண்டையும் மற்றும் தலா ரூ. 500/– அபராதம் விதித்தும், அதைக் கட்டத் தவறும் பட்டச்சத்தில் ஒவ்வொரு குற்றவாளிகளுக்கும், ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டயையும்,

(8.6) 1,2 எதிரிகள் மீது வனையப்பட்ட 305(a) BNS ன் கீழான குற்றத்திற்கு 1,2 எதிரிகளுக்கு ஒரு வருட காலம் மெய் காவல் சிறைத்தண்டையும் மற்றும் தலா ரூ. 500/– அபராதமும் விதித்து அதைக் கட்டத் தவறும் பட்டச்சத்தில் ஒவ்வொரு குற்றவாளிகளுக்கும், ஒரு வார மெய் காவல் சிறைத்தண்டணை விதித்து தீர்ப்பளிக்கிறது. மொத்தம் அபராதம் ரூ. 2,000/–.

(8.7) எதிரிகள் குற்றவாளி என ச/பி. 271(2) BNSS ன் கீழ் தீர்மானிக்கப்படுகிறது.

(8.8) எதிரிகள் 25.12.2025 ல் இருந்து 17.07.2026 வரையில் மொத்தம் 204 நாட்கள் சிறையில் இருந்து வந்துள்ளார்கள். எதிரிகள் ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களை பிரிவு 468 BNSS –ன் கீழ் கழித்து கொள்ள இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

(8.9) மேற்படி இரண்டு பிரிவுகளின் கீழான சிறை தண்டணைகளையும், 1,2 எதிரிகள் ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது.

9. இவ்வழக்கில் வழக்கு சொத்தான சி.பி.எண்.373/2025, வழக்கு சொத்தான Dell Lap–top மற்றும் அரக்கு கலர் பேக் நீதிமன்ற பாதுகாப்பில் இருந்து வருகிறது. வழக்கு சொத்துக்களை அதன் உரிமையளார் உரிய மனுதாக்கல் செய்து பெற்றுக் கொள்ளலாம். மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அவரை வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேலும், பிணையபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

/இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 17 ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது/.

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.07.17 19:32:06 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.விக்னேஷ் |
| அ.சா.2 | திரு.சிவக்குமார் |
| அ.சா.3 | திரு.அறிவழகன் |
| அ.சா.4 | திரு. பழனியப்பன் |
| அ.சா.5 | திருமதி. கீதா (காவல் ஆய்வாளர்) |
| அ.சா.6 | திரு. அருளரசு |
| அ.சா.7 | திரு. உதயன் (தலைமை காவலர்) |
| அ.சா.8 | திரு. இளங்கோ (SI) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சாஆ.1 | 08.12.2025ம் தேதியிட்ட புகார் மனு |
| அ.சாஆ.2 | 25.12.2025ம் தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சாஆ.3 | 25.12.2025ம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| அ.சாஆ..4 | 25.12.2025ம் தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சாஆ.5 | 25.12.2025ம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| அ.சாஆ.6 | 09.12.2025ம் தேதியிட்ட Visiting Report |
| அ.சாஆ.7 | 09.12.2025 ம் தேதியிட்ட Identification Report |
| அ.சாஆ.8 | 08.12.2025ம் தேதியிட்ட பார்வை மகசர் |
| அ.சாஆ.9 | 08.12.2025ம் தேதியிட்டமுதல் தகவல் அறிக்கை |
| அ.சாஆ.10 | 08.12.2025ம் தேதியிட்ட மாதிரி வரைப்படம் |
| அ.சாஆ.11 | 25.10.2025ம் தேதியிட்ட ச/பி மாறுதல் அறிக்கை |
| அ.சாஆ.12 | 08.12.2025ம் தேதியிட்டகைப்பற்றுதல் மகசர் |
| அ.சாஆ.13 | 08.12.2025ம் தேதியிட்டledger உண்மை நகல் |

**<u>அரசு தரப்பு சான்றுபொருள்–</u>** Dell Laptop மற்றும் அரக்கு கலர் பேக்.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள்</u>** – இல்லை

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.07.17 19:32:13 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.